www.tamilarangam.net

# அரசியல் தொடர்

## அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

# வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள்!

அற்புதன் எழுதுவது

**1990** அக்டோபர் 30ம் திகதிக்கு முன்பாக வடபகுதியில் உள்ள முஸ்லிம்கள் வெளியேற வேண்டும் என்று கோரும் சுவரொட்டிகள் மன்னாரின் சில பகுதிகளில் காணப்பட்டன.

யாரோ விஷமிகள் செய்த வேலை என்றுதான் முதலில் கருதப்பட்டது. ஆனால் புலிகள் அது தொடர்பாக உத்தியோகபூர்வமாக மறுக்கவும் இல்லை, உத்தியோகபூர்வமாக பகிரங்கமாக அறிவிக்கவும் இல்லை.

அதன்பின்னர் புலிகள் இயக்கப் பொறுப்பாளர்களும் வாய்மூலமாக தங்கள் முடிவை முஸ்லிம்களுக்கு கூறினார்கள்.

அக்டோபர் 30ம் திகதிக்கு முன்னர் வெளியேறவேண்டும். அதனை மீறுகிறவர்கள் மரண தண்டனைக்கு உள்ளாவர் என்று அவர்கள் கூறினார்கள்.

முஸ்லிம் கிராமங்கள் சிலவற்றுக்குள் ஒலிபெருக்கிகள் மூலம் புலிகளது அறிவித்தல் வெளியிடப்பட்டது.

மன்னார், முல்லைத்தீவு மற்றும் யாழ் குடாநாடு ஆகிய பகுதிகளில் தங்கியிருந்த முஸ்லிம்களை வெளியேற்றும் முடிவில் புலிகள் மிகவும் உறுதியாக இருந்தனர்.

புலிகளின் முடிவு தவறானது என்பதை அவர்களிடம் எடுத்துச் சொல்லவும் எவரும் முன்வரவில்லை.

மன்னார், முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் உள்ள முஸ்லிம்கள் முடிவை பரிசிலிக்கும்படி புலிகளிடம் கோரினார்கள்.




குறுகியகால அவகாசத்தில் மூச்சுவிடக்கூட நேரமில்லாமல் தங்கள் உடமைகளில் கொண்டு செல்லக்கூடியவற்றை மட்டும் தேர்ந்தெடுத்து மூட்டை முடிச்சுக்களாக கட்டி முடிக்க வேண்டியிருந்தது.

மன்னாரில் இருந்து சுமார் 40 ஆயிரம் அகதிகள்வரை புத்தளம் மாவட்டத்திற்கு வந்து சேர்ந்தனர் என்று புத்தளம் மாவட்ட அரச அதிபர் அப்போது கூறியிருந்தார்.

100 படகுகள்வரை மன்னாரில் இருந்து முஸ்லிம் அகதிகளை ஏற்றி இறக்குவதில் ஈடுபட்டன.

படகுகளுக்கு காத்திருக்காமல் தரை வழியாக வவுனியா எல்லைவரை பல ஆயிரக் கணக்கானோர் வந்து சேர்ந்தனர். அவர்கள் அநுராதபுரம் நோக்கிச் சென்றனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியேறிய 55 ஆயிரம் பேர் வெளியேறி உள்ளதாக முஸ்லிம் காங்கிரஸ் கூறியிருந்தது.

### குற்றச்சாட்டு

வடபகுதியில் இருந்து தாம் வெளியேறுவதற்கு முஸ்லிம் காங்கிரசே காரணம் என்று முஸ்லிம்கள் பலர் கூறினார்கள்.

"நாம் உயிரைக் கொடுத்துப் போராடுகிறோம். பல்லாயிரம் உயிர்களை பலிகொடுத்திருக்கிறோம். எமது போராட்டத்தில் முஸ்லிம் காங்கிரசும் அஷ்ரப்பும் குளிர்காய்கின்றனர். தனிமாகாணம் கேட்கின்றனர். வடக்கு-கிழக்கை துண்டாடும் அரசின் சதிக்கு துணை போகின்றனர். அதனால்தான் உங்களை வெளியேற்றுகிறோம்!" என்று புலிகள் முஸ்லிம்களிடம் கூறியனுப்பினார்கள்.

ஆனால் வடபகுதி முஸ்லிம்கள் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசுடன் அக்கால கட்டத்தில் பெருமளவு உடன்பாடு கொண்டிருக்கவில்லை. தனி மாகாணக் கோரிக்கையையும் அவர்கள் ஆதரிக்கவில்லை.

அங்கு முஸ்லிம்கள் அவரைச் சந்தித்தனர். 'முஸ்லிம் காங்கிரசின் தனி மாகாணக் கோரிக்கைதான் புலிகள் தம்மை வெளியேற்றுவதற்கான காரணம்' என்று அவர்கள் ரஞ்சனிடம் கூறினார்கள்.

நவம்பர் முதலாம் திகதி கொழும்பில் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை நடத்தினார் ரஞ்சன்.

"மன்னாரில் இருந்து வெளியேறிய முஸ்லிம்களை மீண்டும் அங்கு குடியமர்த்துவோம். அதனை செய்தே தீருவோம்" என்று கூறினார்.

ரஞ்சன் விஜயரத்தினா முஸ்லிம் காங்கிரசுக்கும் ஒரு வேண்டுகோள் விடுத்திருந்தார். "நேற்று நான் (31.10.90) மன்னார் சிலாவத்துறைக்குச் சென்றிருந்தேன். அங்கு அகதிகளுடன் உரையாடினேன்.

தம்மிடம் இருந்த பெறுமதியான சகல பொருட்களையும் புலிகள் பறித்துவிட்டதாக அவர்கள் கூறினார்கள்.

புலிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்காக முஸ்லிம்கள் அங்கிருந்து வெளியேறும் வரை நாம் பொறுத்திருக்க வேண்டியேற்பட்டது.

இன்று (1.11.90) இரண்டு இராணுவப் பட்டாளங்கள் மன்னாருக்குச் சென்றுள்ளன.

மக்களின் சம்மதமின்றி இன்றைய முஸ்லிம் தலைமைகளால் எடுக்கப்படும் தவறான முடிவுகளை சிங்கள அரசு தனக்கு சாதகமாகப் பயன்படுத்துகிறது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தமிழ் மக்களுடன் இணைந்து போராட வேண்டிய முஸ்லிம் மக்களை முஸ்லிம் காங்கிரசும் அஸ்ரப்பும் தமிழர்களுக்கு எதிரான ஒரு சக்தியாக உருவாக்கி வருகின்றனர்.



இடம்பெயர்ந்த முஸ்லிம்களுக்காக நடத்தப்பட்ட போராட்டம்

அதிலும் குறிப்பாக யாழ் குடாநாட்டு முஸ்லிம்கள் முஸ்லிம் காங்கிரசைப் பற்றி அக்கறையே கொள்ளவில்லை.

முஸ்லிம் காங்கிரசின் கொள்கைகளையே ஏற்றுக் கொள்ளாத வட பகுதி முஸ்லிம்களை முஸ்லிம் காங்கிரசின் கோரிக்கைக்காக புலிகள் வெளியேற்றியது பெரும் முரண்பாடு.

### வரலாற்றுத் தவறு

விடுதலைப் புலிகள் இயக்கம் தனது போராட்ட வரலாற்றில் செய்த மாபெரும் தவறு முஸ்லிம்களை வடபகுதியில் இருந்து வெளியேற்றியது.

தமிழ் பேசும் மக்கள் என்று பொதுப்பதத்திற்குள் தமிழ், முஸ்லிம் மக்கள் அடங்குகின்றனர்.

வடக்கு-கிழக்கு தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் பொதுவான பாரம்பரியத் தாயகமாகும்.

வடபகுதியில் இருந்து முஸ்லிம்களை வெறியேற்றுவதற்கு புலிகள் கூறிய காரணங்கள், விளக்கங்கள் எவையும் ஏற்றுக்கொள்ளக் கூடியவையல்ல.

### ரஞ்சனிடம் புகார்

மன்னாரில் இருந்து முஸ்லிம்கள் வெளியேறியபோது பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜயரத்தினா மன்னார் சிலாவத்துறைக்குச் சென்றிருந்தார்.

குறிப்பாக, விடுதலைப் புலிகளை இராணுவரீதியில் அழிக்க முடியாத சிறீலங்கா அரசு முஸ்லிம் மக்களை தமிழ் மக்களின் எதிரிகளாக்க முனைகிறது." என்று உலகத் தமிழர் பத்திரிகை தனது ஆசிரியர் தலையங்கத்தில் குறிப்பிட்டிருந்தது.

### கவனிப்பாரில்லை

வடக்கில் இருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களுக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசோ அல்லது முஸ்லிம் தலைவர்களோ போதிய உதவிகளைச் செய்யவில்லை.

புத்தளம் மாவட்டத்தில் தங்கியிருந்த அகதிகள் தங்குமிட வசதிகூட இல்லாமல் அவதிப்பட்டனர்.

அதனால் இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்கள் மத்தியில் இருந்தே அகதிகள் நலனுக்கான அமைப்புக்கள் பல தோன்றின.

முஸ்லிம் மக்களை புலிகள் வெளியேற்றியதை சகல தமிழ்க் கட்சிகளும் கண்டித்தன. ஈ.பி.டி.பி. புத்தளத்தில் அலுவலகம் ஒன்றை நிறுவி முஸ்லிம்களுக்கு உதவியளித்து வருகிறது. ஏனைய தமிழ்க் கட்சிகள் இடம்பெயர்ந்த முஸ்லிம்கள் பக்கம் இன்றுவரை சென்றதில்லை. இடையே ஒரு தடவை 1994 பொதுத் தேர்தலின்போது மட்டும் பிரசாரத்திற்காக சகல தமிழ்க் கட்சிகளும் இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்களை தேடித் திரிந்தன.

முஸ்லிம் மக்கள் வெளியேறி இந்த மாதத்துடன் (98 அக்டோபர் 30) எட்டு வருடங்கள் பூர்த்தியாகின்றன.

முஸ்லிம்களை வெளியேற்றியது தவறு என்பதை புலிகள் இயக்க தலைவர் பிரபாகரனும் ஒப்புக்கொண்டுள்ளார். அன்ரன் பாலசிங்கமும் கூறியுள்ளார்.

ஆனாலும் வடபகுதிக்கு சென்று குடியேறுமாறு புலிகள் தாமாக கூறவில்லை. அதேசமயம் மன்னாரில் மீளக் குடியமர்ந்த முஸ்லிம்களுக்கு புலிகளிடம்இருந்து எவ்வித அச்சுறுத்தலும் விடுக்கப்படவில்லை.

# ஏறாவூரில் வெறியாட்டம்

'எடுத்த முடிவு எடுத்ததுதான். புறப்பட ஆயத்தமாகுங்கள்' என்று கூறப்பட்டது.

யாழ்ப்பாணத்திலும் ஒலி பெருக்கிகள் மூலம் முஸ்லிம் பகுதிகளில் அறிவிப்பு செய்யப்பட்டது.

### நாம் பொறுப்பல்ல

யாழ்ப்பாண முஸ்லிம்கள் தமக்குத் தெரிந்த புலிகள் இயக்க உறுப்பினர்களிடம் சென்று "நாங்கள் உங்களுக்கு என்ன துரோகம் செய்தோம்? எங்களை ஏன் வெளியேறுமாறு கூறுகிறீர்கள்?" என்று கேட்டனர்.

முஸ்லிம் மக்களுடன் நன்கு பரிச்சயமான புலிகளது உறுப்பினர்கள்: "இதற்கும் எங்களுக்கும் தொடர்பில்லை. மட்டக்களப்பு அணிதான் இதற்கு பொறுப்பாக நிற்கிறது. அவர்களோடு பேசிப் பாருங்கள்" என்று கூறிவிட்டனர்.

யாழ்ப்பாண முஸ்லிம்களை வெளியேறுமாறு அறிவித்தல் விடுத்ததிலும், வெளியேறும் நடவடிக்கைகளை கண்காணிப்பதிலும் மட்டக்களப்பு மாவட்ட புலிகள் இயக்க முக்கியஸ்தரான கரிகாலன் முன்னணியில் நின்றார்.

குறிப்பிட்டளவு பொருட்களுக்கு மேற்பட்டு எடுத்துச் செல்லக்கூடாது என்று புலிகள் கட்டளையிட்டிருந்தனர்.

மன்னார், முல்லைத்தீவு பகுதிகளில் வெளியேறுவோரின் குடும்ப விபரம், அவர்கள் எடுத்துச் செல்லும் பொருட்களின் விபரம் போன்றவற்றை குறிப்பிடுமாறு கோரும் பத்திரங்கள் புலிகளால் தரப்பட்டன.

யாழ் குடாநாட்டில் யாழ்ப்பாணத்திலும், சாவகச்சேரியிலுமே முஸ்லிம்கள் பெரும் எண்ணிக்கையில் வாழ்ந்து வந்தனர்.

யாழ் நகரில் பல முக்கியமான வர்த்தக நிலையங்கள் முஸ்லிம்களுக்கு சொந்தமாக இருந்தன.

வர்த்தக நடவடிக்கைகள் மூலம் வசதி படைத்த முஸ்லிம்கள் ஆயிரக்கணக்கானோர் இருந்தனர்.

தமது சொத்துப் பத்துக்களை கைவிட்டு வெளியேற வேண்டிய கட்டாயத்துக்கு உள்ளானபோது அவர்கள் கலங்கி நின்றனர்.

இவ்வாறான ஒரு நிலை தங்களுக்கு ஏற்படும் என்பதை வடபகுதி முஸ்லிம்கள் கனவிலும் நினைத்தது கிடையாது.

முஸ்லிம்கள் கொழும்புக்கும் ஏனைய பகுதிகளுக்கும் சென்றனர்.

புத்தளம், வவுனியா, அநுராதபுரம், குருநாகல் போன்ற பகுதிகளில் பெரும் தொகையான முஸ்லிம்கள் தங்கவைக்கப்பட்டனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து முஸ்லிம்கள் வெளியேறியதும் முஸ்லிம் பகுதியைச் சுற்றி புலிகள் பாதுகாப்பு ஏற்பாடு செய்தனர். நகரில் இருந்த முஸ்லிம்களது வர்த்தக நிறுவனங்களுக்கும் பாதுகாப்பு போடப்பட்டது.

இதனை அறிந்த சில பத்திரிகைகள் முஸ்லிம்களின் உடமைகளுக்கு பாதுகாப்பளிக்க புலிகள் நடவடிக்கை எடுத்துள்ளதாக செய்தி வெளியிட்டன.

ஆனால், நடந்ததோ வேறு. முஸ்லிம்களது வர்த்தக நிறுவனங்களிலும், முஸ்லிம்களின் பகுதிகளிலும் விட்டுச் செல்லப்பட்ட உடமைகளை தமது இயக்கம் சுவீகரித்துக் கொள்ளும் பொருட்டே பாதுகாப்பு போடப்பட்டது.

அவ்வாறு பாதுகாப்பு போடப்பட்டிருக்காவிட்டால் திருடர்கள் தங்கள் கைவரிசையை காண்பித்திருப்பர்.

யாழ் குடாநாட்டில் இருந்த முஸ்லிம்களது பிரபல வர்த்தக நிறுவனங்கள் பின்னர் புலிகள் இயக்கத்தினரின் நிறுவனங்களாக நடத்தப்பட்டு வந்தன.

யாழ்ப்பாணத்தில் முஸ்லிம்கள் குடியிருந்த பகுதியில் உள்ள வீடுகளில் புலிகள் இயக்கத்தின் பிறமாவட்ட உறுப்பினர்களதும், பலியான உறுப்பினர்களதும் குடும்பத்தினர் தங்கவைக்கப்பட்டனர்.

### அரசு மௌனம்

வடபகுதியில் இருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டது தொடர்பாக பிரேமதாசா அரசாங்கம் உத்தியோகபூர்வமான கண்டனம் எதனையும் உடனடியாகக் கூறவில்லை. ஜனாதிபதி பிரேமதாசாவும் கருத்து எதனையும் கூறவில்லை.

ஏறக்குறைய 75 ஆயிரம் முஸ்லிம்கள் வட பகுதியில் இருந்து வெளியேறினர் என்று மதிப்பிடப்பட்டது.

### மன்னிக்க வேண்டுகிறோம் அது துரதிஷ்டமான சம்பவம்

'அவுட் லுக்' (டில்லி) பத்திரிகை நிருபர் எ.எஸ்.பன்னீர் செல்வத்திற்கு 1995 நவம்பரில் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆலோசகர் கலாநிதி அன்டன் பாலசிங்கம் அளித்த பேட்டியிலிருந்து.

**கேள்வி:** *நீங்கள் பல்லின சமூகத்தை ஏற்றுக்கொள்ளத் தயாராக உள்ளதாக மிகச்சிலரே நம்புகிறார்கள். உங்களது சகிப்பின்மைக்கு வட பகுதி முஸ்லிம்களை நீங்கள் பலாத்காரமாக வெளியேற்றியதை உதாரணமாகக் காட்டுகிறார்கள்?*

**பதில்:** அது ஒரு துரதிஷ்டவசமான விடயம். அதற்காக நாம் மன்னிப்பு கோருகிறோம். எனினும் அங்கு இனரீதியான முறுகல் நிலையிலிருந்து நாம் அவர்களுக்கு ஒரு கெடுதலும் செய்யாமல் வெளியேறுமாறு கேட்டோம். அது ஒரு தவறு. வட-கிழக்கு மண்ணில் வாழ்வதற்கு மறுக்க முடியாத உரிமை கொண்டவர்கள் என அவர்களுக்கு தெரிவித்துள்ளோம். சகஜ நிலைமை ஏற்பட்டதும் அவர்கள் தமது வீடுகளுக்குத் திரும்பலாம். ■

மன்னாரையும் உள்ளடக்கிய முஸ்லிம் மாகாணசபை ஒன்றை முஸ்லிம் தலைவர்கள் கேட்பதால் புலிகள் தம்மை இம்சிப்பதாக சிலாவத்துறையில் வைத்து முஸ்லிம்கள் கூறினார்கள்.

எனவே அதுபோன்ற கோரிக்கைகளை விடுக்க வேண்டாம் என அந்தத் தலைவர்களிடம் கேட்டுக் கொள்ளுமாறு அவர்கள் எம்மிடம் வேண்டிக்கொண்டனர்.

அதனை ஜனாதிபதிக்கு எழுதி அறிவிக்குமாறு நான் கூறினேன்.

முஸ்லிம் தலைவர்கள் தமது அரசியல் கோரிக்கைகளால் ஏனைய பகுதிகளில் வாழும் முஸ்லிம்களை கஷ்டத்தில் போடக்கூடாது." என்று கூறியிருந்தார் ரஞ்சன் விஜயரத்ன.

### புலிகள் கூறியது

முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்ட காரணம் குறித்து புலிகள் உத்தியோகபூர்வமாக எக் கருத்தையும் வெளியிடவில்லை.

விடுதலைப் புலிகளின் உலகத் தமிழர் பத்திரிகை பின்வருமாறு கூறியது:

"ஸ்ரீ லங்கா அரசின் பிரதி பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் மன்னாரில் பெரும் பகுதிகளை இராணுவக் கட்டுப்பாட்டில் கொண்டுவரப் போவதாகவும், அதன் பின்னர் அங்கு முஸ்லிம்களை குடியமர்த்தப் போவதாகவும் கூறியிருக்கிறார்.

பாரிஸ் முஸ்லிம் இளைஞர் சபைகள், சம்மேளனத்தின் தலைவர் எம்.எம்.சுஹைர் முஸ்லிம் கிராமங்களை பாதுகாப்பதற்காக 15 ஆயிரம் முஸ்லிம் இளைஞர்களைக் கொண்ட படையொன்றை திரட்ட முஸ்லிம் மக்கள் தயாராக இருப்பதாக அறிவித்துள்ளார்.

இன்றைய சிறிலங்கா முஸ்லிம் அடிப்படைவாத அமைப்புக்கள் சிறிலங்கா அரசுடன் இணைந்து தமிழ் மக்களை கொன்றழிக்கும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளன.

ஏற்கனவே கிழக்கு மாகாணத்தில் இத்தகைய சக்திகளால் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டு வருகின்றனர்.

வடக்கு-கிழக்கில் வாழும் முஸ்லிம்

### சவுக்கடி படுகொலை

மட்டக்களப்பு மாவட்டத்தில் 1998 அக்டோபர் 20ம் திகதி மற்றுமொரு படுகொலை நடைபெற்றது.

ஏறாவூரின் கிழக்கே கடற்கரையோரமாக இருப்பது சவுக்கடி என்னும் தமிழ் கிராமம். பெரும்பாலும் மீனவர்களைக் கொண்ட கிராமம் இது.

துப்பாக்கிகள், வாள்கள் கத்திகள் சகிதம் புகுந்த குழுஒன்று ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என்ற பேதம் இன்றி வெட்டியும், சுட்டும் இரத்த வெறியாட்டம் நடத்தியது.

31 பேர் படுகொலை செய்யப்பட்டனர்.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த கணவன் மனைவி குழந்தைகள் உட்பட பலர் வெட்டிச் சாய்க்கப்பட்டனர்.

ஆறு மாதக் குழந்தைகள் இரண்டும் வெட்டி வீசப்பட்டிருந்தன. 2 வயதுக்கும் பத்துவயதுக்கும் உட்பட மேலும் 9 பிள்ளைகள் கொல்லப்பட்டனர்.

ஊர்காவற்படையினரே இப் படுகொலைக்கு காரணம் என்று மக்கள் சந்தேகித்தனர்.

(தொடர்ந்து வரும்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்